

# அமரர் அருணாசலம் சதாசிவம்
# (சதா)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 2018.01.07

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தில்
வசித்தவரும் தற்போது பிரான்சில் வாழ்ந்தருமாகிய

அமரர்

# அருணாசலம் சதாசிவம் [சதா]

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

31 ஆம் நாள் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013.01.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்

நின்று எமக்கெல்லாம் வழிகாட்டி

பரிவு காட்டி பாசத்தால் எம்மை

வளர்த்தெடுத்து இவ்

வாழ்விற்கு இலக்கணமாய்

பண்பின் இருப்பிடமாய் இன் முகத்துடன்

வாழ்ந்து இறைவனடி சேர்ந்து விட்ட

எம் அன்புத்தெய்வத்தின் பாதங்களில்

இந்நூலை காணிக்கையாக்குகின்றோம்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
1956.07.12

உதிர்வு
2017.12.06

அமரர்
# அருணாசலம் சதாசிவம் [சதா]

சீரேந்து ஏவிளம்பி வருட கார்த்திகை ஆறாம் நாள்
தாங்கு புகழ் திருதியைத் திதி புதன் தனில்
அனைலையம்பதியின் ஆன்றோன் சதாசிவம்
ஐயனார் திருவடிதான் சேர்ந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்



## விநாயகர் துதி

பிடியதனுருவுமை கொள மிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

# பஞ்ச தோத்திரம்

## தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

அங்கமும் தேவமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதித்த வழ் மாடவீதி
மருகல் நிலாவியமைந்த சொல்லாய்
சேங்கயலார் புனற் செல்வ மல்கு
சீர் கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்கு விளங்கெதி யேந்தியாடுங்
கணபதியீச்சரங் காமுறவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனே உனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திரு வீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்
புண்டேல் உண்மையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
இறைவா ! நீ ஆடம் போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

உம்பர் தரு தேருமணி கசிவாகி
ஒன்கடலுள் தேன் அமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றன் உயிர்க்கு ஆதரவுற்றருள் வாயே
தம்பிதனக் காகவனத் தணை வோனே
தந்தை வலத் தாலருள்கை கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அருணாசலம் சதாசிவம் அவர்களின் வாழ்வியல் சரிதம்

ஆழி சூழ் நித்திலத்தின் முத்ததுவாம்
அழகேயுருவான இலங்கைத் திருநாட்டின்
அற்புதமேயென வியக்கும் அறிவுடையோர்
உறைந்திடும் வடபால்
சப்த தீவினில் ஒன்றாம் தன்னிகரில்லா
ஐயனார் விரும்பியுறைந்து அருளாட்சி செய்யும்
அனலையம்பதியின் ஒப்பரிய விவசாயமும்
ஓங்கு புகழ் வணிகரும் செப்பரிய
ஆளுமைப் புலமையும் மேவிய குலத்தினிலே
கணபதிப்பிள்ளை தெய்வானை இணையரின்
குலத்திடை நற்பேறாய் உதித்தனன்
அருணாசலமெனும் அருங்கொடையான்!
பருவத்தே பயிர்செய் பண்டையரராய்
அப்பதியாம் அனலை தன்னில்
அருகிலுறை செம்மல் அருணாசலம் - காமாட்சி
தம்பதியின் நற்தவப் பேற்றால் - பார்
விரும்பும் பாங்குடையாள் இருந்தோம்பி
இல்வாழ்வில் இணையிலா தெய்வ மணம் கமழும்
காமாட்சி (தெய்வானை) யெனும் நங்கை தனை
கரம்பற்றியே - அன்பொடு அறமும்
வையத்து மாந்தர் மனைவிரும்பும்
நல்லிணை வாழ்வின் பேறாய்
சுற்றமும் சூழலும் மத்திட ஒப்பற்ற
ஆறு மழலைகளால் உயர்வு பெற்ற
இல்லறம் தனில் முதல் முத்தாய்
உதித்தனன் ஈசன் நாமத்தொடு
இணையிலா சதாசிவம் எனவே
நாளும் பெயர் பெற்றனன் இவனும்!
விரும்பிடும் அறங்களால் மேவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணத்தினாள் சேதுராணியெனும்
தங்கையவளும் உற்ற நற்றுணையாய்
ஓங்கு புகழ் குலசிங்கத்தோடு வாழ்கின்றாள்
சுவிஸ் தனில்!
பலவித்தகன் பத்மநாதனும் பாசம் மேவிய
உற்ற நல் சகோதரனாய் மற்றவர்
போற்றிடும் மாண்பினனாய் சாந்தலட்சுமியின்
கரம் பற்றியே கனடாதனில் வாழ்நாளில்
ஈசன் பாதம் இணையடி சேர்ந்தனன்.
பொய்மையின்றிய அன்பினளாய் - அகமதில்
சுற்றமும் உறவும் இலங்கிட தாய்மண்ணில்
தக்கநற் தங்கையாய் யோகராணியும்
நடராசாவின் கரமது பற்றியே வாழ்கின்றாள்.
பாசமும் நேசமும் பாங்குறு பண்புநிறை
தங்கையாம் வசந்தராணியும் - ஏதும்
குறைவிலாளாய் இன்முக நல்லான்
பத்மநாதனுடன் இல்லறம் காத்தே
ஜேர்மனில் உறைந்திட்டாள்.
எல்லோருக்கும் இளையவனாய் - அன்பினில்
குறைவிலான் அனைத்திற்கும் தம்பியுண்டென்றே
அண்ணனுக்கு அனுதினமும் அன்பூட்டும்
அருமையான் ரவீந்திரநாதனும் தன்மனம்
விரும்பும் இணையறம் மேவிய
பிறேஜிடாவுடன் வாழ்கின்றான் ஜேர்மனில்
உற்ற குலத்தின் நற்தவப் பேறாய்
நற்சகோதரர்களைப் பெற்ற வள்ளலாய்
எட்டுத் திக்கும் புகழ்விளங்க வாய்த்த
மைத்துனர்கள் ஒட்டியே வாழ்ந்ததினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்து வாழ்வதனில் தன்னிகரில்லாத்
தலைவனாய் சதாசிவத்தானும் உயர்த்திட்டான்!
தொன்மையும் பெருமையும் துறையுறை
பருத்தித் துறையின் பண்பாளன்
கணபதிப்பிள்ளை கரம்பற்றிய நல்லற
நங்கை வள்ளிப்பிள்ளையின் இல்லறம் மேவிய
இணையிலா வாழ்வில் பேறாய் பெற்றனர்
இப்புவியின் எச்சங்களாய் எழுவரை!
தக்க நற்புதல்வனாய் தரணியில் வந்துதித்த
பத்மநாதனும்(அமரர்) பண்புடையாள்
வசந்தமலருடன் (அமரர்) இல்லறவாழ்வின்
இயல்புறு நங்கையாய் எல்லோரையும்
அணைத்திடும் புஸ்பமலரும் எல்லாப்
பெருமையும் என்னவளே யெனும்
சதாசிவத்தின் தாழடிக் கொன்றே செல்வமரும்
மங்கலம் நிறை றஞ்சிதமலருடன்
பொற்புடை புனிதமலரும் - இலங்கு
வையத்து இணையிலா ஜீவமலரும்
சேர்ந்தனர் பதியாள் நற்சோதரராய்!

சொல்லினில் மெல்லினாள் துடிப்பினில்
வல்லாளாய் சூதுவாதறியா நற்துணையாய்
சதாசிவத்தின் மனம் கவர் மங்கையாய்
இல்லறவாழ்வில் இணைந்தாள் செல்வமலரும்
இவ்வுலக வாழ்வின் இங்கித கீர்த்தனையாய்
தன்னிகரில்லாத் தவப்பேறாய் இத்தரணியில்
வந்துதித்தாள் மூத்தவள் தர்ஜனியும்
பாரிடை வித்தகியாய் பண்புடை நல்லாசானாய்
மேவிய ஆசிரியப் பணியால் விரும்பியே - தன்
மனம் கவர் நாயகன் ஆசான் றமாகரனை கரமிணைத்து
வாழ்கின்றாள் தாயக மண்ணில்.
கனவுகள் நனவாக தாய் தந்தையருகில்லா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிடவே தளரா முயற்சியினாளாகியே
தயாளினியும் தந்தையடி சென்றே
இல்லறத்தில் நல்மகனாய் சுதாகரனுடன்
மாங்கலநாண் பூட்டிய மணவாழ்வின
நற்பேறாய் கண்டனள் கவிஷானியையும்
அகம்நிறை அன்பினாள் வினோதினியும்
மாசற்ற நேசமுடையான் லோகதாசனுடன்
கரம் பற்றியே பார்போற்றும் இல்லற
வாழ்வின் இணையாக சாஹித்தியா,
டில்சியா, விபிதன் ஆகிய முத்துக்களோடு
அன்னை தந்தை அருகிருந்து வாழ்கின்றாள்
பேர் விளங்க மைந்தன் எனும் ஒப்பற்ற
பெருமையுடையானாய் ஜெயமோகனும்
கடைக்குட்டியாள் தந்தை தாயில்
கண்ணும் கருத்துமுடையாள் - என்னாளும்
பிரியமான பிரிசாந்தினியையும்
பெற்றனன் பிள்ளைகளாய்!
ஏதும் குறைவிலானாய் இல்லற வாழ்வில்
பேர்விளங்கும் பேறு பெற்ற வனாய்
மனையாளின் மாசற்ற அன்பினனாய்
மக்களின் பேறுபெற்ற நற்தந்தையாய்
இப்புவியில் ஈடில்லா வாழ்வுதனை
வாழ்ந்திட்ட சதாசிவத்தையும் கூற்றுவன்
பலதடவை கூவியழைத்தும் - இணை
மனையாள் மாங்கல்யத்தின் பலமதுவோ
பலதடவை கூற்றுவன் கூட தோற்றுப்போனான்.
ஐயகோ! விதியதுவோ! எனவே அனைவரும்
உறக்கத்திலிருக்க ஆண்டவன் தன்னடியில்
அழைத்திட தருண மிதுவென அழைத்திட்டான்
சதாசிவத்தையும் ஆற்றுவோம் அவன்
திருவடி சரணென்று எண்ணியே!
மேவிடும் புகழினான் புகுந்திட்டான் இறையடியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழி தேடும் ஒரு முகம்...

தாலாட்டி மகிழ்த்தவரே
சீராட்டி பராட்டி மார்போடு
உறங்க வைத்து மனமகிழ்ந்து திளைத்தவரே
நான் நலம் வாழ
தினம் உழைத்து தேகமதைக் கரைத்தவரே...
கற்றவர் சபையில்
உற்றவர் உறவுகள் உலகிலே
எனை முகவரியாக்கி மகிழ்ந்தவரே
முழு ஒளி தந்த ஒளிர்ந்தவரே...

என் பதின்மூன்று வயதில் கடல் கடந்தாய்
பிள்ளைகள் நாம் வாழ
உறைபனியில் உடல் கரைத்தாய்
துணிவுள்ள பிள்ளையாய் எனை வளர்த்தாய்
துயரங்களைக் கடந்து உயரமாகி
புகழ் நிறைத்தாய் அப்பா

உருத்திரபுரமே உனைத் தேட
உலகபுரமே உன்பெயர் பாட
கருத்தந்து கலங்கரையாக்கியவரே
இனி எங்கே உனைத் தேட

நித்தம் தொலைபேசியில்
"என் பிள்ளை" எனும் குர்
முத்தமாய் வருடி எனைக்காத்த
தெய்வத்தை இனி காண்பதெப்போ
சுத்தமாய் பேசாது மௌனமாய்
மகிழும் திருவடி தொழுவதெப்போ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தையாய் வந்துதித்து
எம்சிந்தையில் ஒளி நிறைந்து
வரும் துன்பம் தடை உடைத்து
வளர்த்திட்ட என் தெய்வமே
இன்று உன் எழில்முகம் காணாது
எரிகையிலும் பார்க்காது
தனிமையில் தீயாகி
கண்ணீரில் குளிக்கிறேன் - அப்பா
கடவுளின் மடியிலே மழலையாய்
மகிழ்திரு அப்பா

-தவியாய் தவிக்கும்-
அன்பு மகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



தொல்லையிலும் பிறவி சூழும் தடைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே
எல்லை மறுவாய் நெறிஅளிக்கும்
வாதவூரன் என்கோன் திருவாசம் எனும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது என்நெஞ்சில் நீங்காதான்றாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள் வாழ்க
ஏகன் அநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவா ருண்மகிழுஞ் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தை நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத வின்ப மருளும்மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராயப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாது நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவுறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள்ள தேனூறி நின்று
பிறந்த பிறப்பருக்கு எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்காயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்துருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாயாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்தப் பாரிக்கும் மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமென் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவெயென் சிந்தைனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே.
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற்கு கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து
செல்வர் சிவபுரத்திலுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் மேத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தர் ஷஷ்டி கவசம்

## நேரிசை வெண்பா

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்கும் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளறரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ஆறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதன் என்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்தலைவைத்து உன் இணையடி காக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூதாள்எனைக் கண்டாள் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணல்ஏரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புமு சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சாவதுரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வாக் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவிதுணை

ஓம் சக்தி

**வீநாயகர் துதி**

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றமும் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

**வேண்டுதல் கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமங்கள் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லலோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்விசிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரு
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வெண்பா**

ஆய கலைக ளறுபத்து நான்கிணைய்யு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

சரஸ்வதி வழிபாடு

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.
தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.
பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கைடக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைமெகாள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்தி கூறிய ஏழு சமுதாய பாவங்கள்

- கொள்கையற்ற அரசியல்
- உழைப்பற்ற செல்வம்
- நெறியற்ற வாணிபம்
- பண்பாடற்ற கல்வி
- மனச்சாட்சியற்ற மகிழ்ச்சி
- மனிதாபிமானமற்ற அறிவியல்
- தியாகமற்ற வழிபாடு

## பதினாறு செல்வங்கள்

1. புகழ்
2. கல்வி
3. வெற்றி
4. வலிமை
5. நன்மக்கள்
6. பொன்
7. நெல்
8. நல்விதி
9. நுகர்ச்சி
10. அறிவு
11. அழகு
12. பெருமை
13. இனிமை
14. துணிவு
15. நோயின்மை
16. நீண்ட ஆயுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித்தமிழைப் பேணுவோம்

- சூரியன் - கதிரவன்
- சந்திரன் - நிலம்
- நட்சத்திரம் - விண்மீன்
- கிரகம் - கோள்
- கமரா - ஒளிப்படமி
- சவர்க்காரம் - வழலை
- சாக்லட் - இன்னட்டு
- சூரியகாந்தி - பொழுதுவணங்கி
- அன்னாசி - செந்தாழை
- றேசர் - அழிப்பான்
- ஸ்ரெப்ளர் - பிணிக்கை
- பேனை - தூவல்
- ரெலிவிசன் - தொலைக்காட்சி
- ஃபோன் - மின்விசிறி
- கம்பியூட்டர் - கணினி
- ரேடியோ - வானொலி
- ரோசா - முளரிப்பூ
- பென்சில் - கரிக்கோல்
- சாவி - திறவுகோல்
- ஐஸ்கிறீம் - பனிக்கூழ்
- கார் - மகிழுந்து
- பிஸ்கட் - மாச்சில்
- பாண் - வெதுப்பி
- ஒரேஞ்சு - கிச்சிலி
- ஆர்கிட் - மந்தாரை
- கெலிகொப்டர் - உலங்குஊர்தி
- செவ்வரத்தை - செம்பருத்தி
- சைக்கிள் - ஈருருளி
- மோட்டார் சைக்கிள் - உந்துருளி
- புகையிரதம் - தொடருந்து
- பூச்சியம்(O) - சூழியம்
- அப்பிள் - குமளி
- கேக் - அணிச்சல்
- சிங்கம் - அரிமா
- கிறேப்ஸ் - கொடிமுந்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதங்கள்

- தை - சுறவம்
- மாசி - கும்பம்
- பங்குனி - மீனம்
- சித்திரை - மேழம்
- வைகாசி - விடை
- ஆனி - ஆடவை
- ஆடி - கடகம்
- ஆவணி - மடங்கல்
- புரட்டாதி - கன்னி
- ஐப்பசி - துலை
- கார்த்திகை - நளி
- மார்கழி - சிலை

## தமிழ்க் கிழமைகள்

- ஞாயிறு
- திங்கள்
- செவ்வாய்
- அறிவன்
- வியாழன்
- வெள்ளி
- காரி

## தமிழ் எண்கள்

| | |
|---|---|
| 1 - க | 6 - சு |
| 2 - உ | 7 - எ |
| 3 - ௩ | 8 - அ |
| 4 - ச | 9 - கூ |
| 5 - ரு | 10 - ௰ |
| | 0 - 0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு வகை அளவை

- எண்ணல்
- நிறுத்தல்
- முகத்தல்
- பெயர்த்தல்
- நீட்டல்
- தெறித்தல்
- சார்த்தல்

## வடசொற்களைத் தவிர்த்து தமிழில் எழுதுவோம்

| | வடசொல் | | தமிழ்சொல் |
|---|---|---|---|
| 1. | கரும்பு | - | கன்னல் |
| 2. | இறைச்சி | - | புலால் |
| 3. | உறைப்பு | - | காரம் |
| 4. | ஏராளம் | - | மிகுதி |
| 5. | ஒற்றன் | - | தூதன் |
| 6. | கருத்து | - | எண்ணம் |
| 7. | கறை | - | மாசு |
| 8. | காரணம் | - | ஏது |
| 9. | கிரி | - | மலை |
| 10. | கிராமம் | - | சிற்றூர் |
| 11. | குரங்கு | - | மந்தி, வானரம் |
| 12. | குருதி | - | இரத்தம் |
| 13. | சரசுவதி | - | கலைமகள் |
| 14. | கூர்மம் | - | ஆமை |
| 15. | சிரசு | - | தலை |
| 16. | சுவர் | - | மதில் |
| 17. | செருக்கு | - | அகங்காரம் |
| 18. | திறமை | - | ஆற்றல் |
| 19. | தேறல் | - | தேன் |
| 20. | பரீட்சை | - | தேர்வு |
| 21. | பனுவல் | - | நூல் |
| 22. | பறவை | - | புள் |
| 23. | பரிசு | - | வெகுமதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. வயது - அகவை
25. கலியாணம் - திருமணம்
26. தம்பதிகள் - இணையர்
27. சடங்கு - கரணம்
28. களர் - விளையாநிலம்
29. கழை - மூங்கில்
30. கூளம் - குப்பை
31. கூலம் - தானியம்
32. பூளை - இலவம்பஞ்சு
33. மாளிகை - அரண்மனை
34. மரணம் - சா
35. வளி - காற்று
36. விழை - விரும்பு
37. புஸ்பம் - பூ
38. வாசம் - நறுமணம்
39. சினேகம் - நட்பு
40. சக்தி - பலம்
41. சேமம் - நலம்
42. தர்மம் - அறம்
43. திராவகம் - நீர்
44. அலுமாரி - நிலைப்பேழை

## புதிய கலைச் சொற்கள்

1. இன்ரநெற் - இணையம்
2. ஈமெயில் - மின்னஞ்சல்
3. ஈகொமர்ஸ் - மின்வணிகம்
4. கீபோட் - விசைப்பலகை
5. ஃபேஸ்புக் - முகநூல்
6. வெப்சைட் - வலைத்தளம்
7. மீடியா - ஊடகம்
8. டிஜிற்றல் - எண்மானம்
9. சீடி - இறுவட்டு
10. ஆட்டோமற்றிக்- தானியங்கி
11. பைலட் - வலவன்
12. லட்டொனப் - மடிக்கணினி
13. செல்போன் - கையடக்கத் தொலைபேசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம்

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் கணவனும் மனைவியும் மனமொத்து எந்தவொரு செயலையும் செய்ய வேண்டும். கணவனும் மனைவியும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். இதில் வென்றவர், தோற்றவர் என்ற பிரச்சினைக்கு இடமில்லை. யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்தாலே தான் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.

கணவனும், மனைவியும் சேர்ந்து திட்டமிட்டுக் குடும்பச் செலவுகளைச் செய்ய வேண்டும். சம்பளத்தை மனைவியின் கையிற் கொடுப்பதுடன் தன் பொறுப்பு முடிந்து விட்டது என்று கணவன் நினைக்கக் கூடாது.

ஒரு குழந்தைக்கு அதன் தாய் தான் முதற்குரு. தாய் வளர்ப்பில் குழந்தையின் குணாதிசயம் நிர்ணயிக்கப்படுகிறது. தாயின் வார்த்தைகள், நடத்தை ஆகியவற்றை அந்தக் குழந்தை மனத்தில் வைத்துக் கொள்கின்றது. தாயின் பொறுப்பு அதிகம்.

அமெரிக்காவில் "மாரேஜ் கவுன்சில்" என்ற அமைப்பின் கீழ் சிறந்த மனோதத்துவ நிபுணர்கள் விஞ்ஞான அணுகுமுறையில் பல தம்பதியினரைக் கலந்து பேசி அறிந்து கொண்டது என்னவெனில், சின்னச்சின்ன நிகழ்ச்சிகளே பெரும் பூகம்பங்களாக மாறி விவாகரத்து வரை செல்கின்றன.

இனிய இல்லறத்தில் விரிசல் ஏற்படாமல் தவிர்க்க "மரேஜ் கவுன்சில் ஆப் அமெரிக்கா" தரும் சில பயனுள்ள சில குறிப்புகளைக் காண்போம். கணவர், மனைவி இருவரும் மனம் விட்டுப் பேசுவது மிகவும் அவசியம். தம்பதியர் இருவரும் அவரவர் விருப்பு அறிந்து கொள்ள வேண்டும். அதே சமயம் ஒருவருக்கு ஒன்று பிடிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் அதையே அடிக்கடி செயதால் அவருக்கு வெறுப்பினை ஏற்படுத்தி விடும். சிறிது புதுமையையும், கற்பனையையும் கலந்து செய்யும் போது அச்செயல்கள் இல்லறத்தினை இனிமையானதாக மாற்றும்.

மனைவியின் உறவினர்களைக் கணவரும், கணவரின் உறவினர்களை மனைவியும் அன்பாகச் சரிசமமாக நடத்த வேண்டும். உறவினர்களால் தம்மிடையே பிரச்சினைகள் வராமல் தம்பதியினர் பார்த்துக் கொள்ளவேண்டும். அவ்வாறே நண்பர்களிலும் மனைவிக்குப் பிடிக்காத நண்பர்களுடன் கணவனோ, கணவனுக்குப் பிடிக்காத நண்பர்களுடன் மனைவியோ பழகுவது பல சந்தேகங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும்.

கணவன், மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் சின்னச் சின்ன உதவிகளைப் பரிமாறிக் கொள்வது அவசியம். இதில் வெட்கத்துக்கு இடமில்லை.

உதாரணமாக வீட்டில் விருந்தினர் வரும் பொழுது மனைவி சமையலறையில் மும்மரமாக இருக்கும் போது கணவன் பழச்சாறு கலந்து மனைக்கு கொடுத்து "களைப்பாக இருக்கா? இதைக் குடித்துவிட்டு வேலை செய்" எனப் பரிவுடன் உபசரித்தல் நல்லது. அவ்வாறே கணவன் சோர்வடையும் போது மனைவியும பரிவுடன் நடந்து கொண்டால் இல்லறத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது.

கணவனும் மனைவியும் உங்களுக்குள் ஒருவர். மற்றவரிடத்தில் என்ன எதிர்பார்க்கிறீர்களோ அதனை அழகாக நயமாகக் கூறுங்கள். உதாரணமாக உங்களைப் போலவே அந்தப்படத்தில் வரும் கதாநாயகன் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிகை உள்ளவராகவும், யதார்த்தமாகவும் இருக்கிறார்" என்று உங்கள் கணவரை எப்படி எதிர்பார்க்கின்றீர்களோ அவ்வாறு கூறலாம். இதே முறையைக் கணவரும் கடைப்பிடித்தல் அவசியம்.

அயலார் முன் கணவன் மனைவி இருவருமே ஒருவரையொருவர் விட்டுக் கொடுத்தல் கூடாது. விருந்தினர் முன் பெரிய ஜோக் அடிப்பதாக நினைத்துக் கொண்டு ஒருவரின் பழக்கவழங்கங்களை மற்றவர் கிண்டலாகப் பேசுவது வரம்புமீறிப் போகும் போது, அதனால் தாழ்வு மனப்பான்மை, மனத்தாங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும், மற்றவர்கள் இதனை எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்பது நமக்குத் தெரியாது. எனவே, இம்மாதிரியான விபரீதங்களைத் தவிர்ப்பது நல்லது.

தம்பதியரில் ஒருவர் மற்றவரை விட அறிவில்... ஆற்றலில்... பொருளாதாரத்தில் சற்றுக் குறைந்தவராக இருக்கலாம். அதற்காக அவரைக் குறைத்தோ, மற்றவர்களுடன் ஒப்பிட்டோ பேசக்கூடாது. இது தாழ்வு மனப்பான்மைக்கு வழிவகுக்கும்.

தம்பதியர் மாதத்தில் ஒரு நாளைக்காவது தங்களுக்கென்று தனியே ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். சிறுவயதுக் குழந்தைகளை தாத்தா, பாட்டியிடமோ, நண்பர்களிடமோ விட்டுவிட்டுச் செல்லாம், அல்லது பெரிய குழந்தைகள் என்றால் அவர்களுக்குப் புரியும் படி கூறிவிட்டு தங்களுக்கென்று ஒரு நாளை ஒதுக்கிக் கொள்வது மிகவும் அவசியம். அந்த நாளை எப்படிக் கொண்டாட வேண்டுமோ அப்படி... தங்களின் விருப்பப்படி புதுமையாக, சந்தோசமாகக் கொண்டாட வேண்டும். இதனால் இயந்திரத்தனமான வாழ்க்கையில் இருந்து ஒரு மாறுதலும் மனத்திலம் உடலிலும் ஓர் உற்சாகமும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் பொய் பேசுவதற்கு எமது பெற்றோரும் காரணம்

பெற்றோர்கள் ஆத்திரம் கொள்ளாதீர்கள். யாதார்த்த் என்னவென்று பார்ப்போம்.

கடைத்தெருவிற்கு எமது குழந்தையுடன் செல்லும் போது அங்கு காணப்படும் அழகான பொம்மையைப் பார்த்து, அப்பொம்மையை வாங்கித் தரும்படி பிள்ளை அடம்பிடிக்கின்றது. அதனை வாங்கிக் கொடுக்கின்றோம். வீட்டில் பிள்ளை அதை வைத்து விளையடும் பொழுது கைதவறி கண்ணாடியால் செய்யப்பட்ட பொம்மை கலீரென்ற ஒலியுடன் உடைந்து சிதறுகின்றது. சத்தம் கேட்டு ஓடி வந்ததாய் பொம்மையை உடைத்தற்காகப் பிள்ளையை நையப்புடைக்கின்றாள். பிள்ளைக்கோ வயது மூன்று. அது ஓவென்று கதறுகின்றது. பிள்ளையின் மனத்தில் தாய் பய உணர்வை வளர்க்கின்றாள்.

அதே குழந்தை மிண்டும் ஒரு பொம்மையை உடைத்த பொது காரணம் கேட்ட தாயிடம் குழந்தை பயத்தின் காரணமாக பொம்மையைப் பூனை தட்டி உடைத்து விட்டதாகப் பொய் கூறுகின்றது.

முதல் சந்தர்ப்பத்திலேயே குழந்தைக்கு கண்ணாடிப் பொம்மையை கவனமாக வைத்து விளையாட வேண்டுமென்று புத்திமதி கூறி பயம் காட்டாமல் இருந்திருந்தால் இரண்டாவது சந்தர்ப்பத்தில் பிள்ளை சுயமாக பொய்யைச் சோடித்துக் கூறக் கற்றுக்கொள்ளாது என்பதை அனைத்துப் பெற்றோரும் மனத்தில் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் மற்றவர்கள் போலப் பாசாங்கு செய்வதில் கெட்டிக்காரர்கள். பல காரணங்களுக்காக வீட்டில் கணவனைத் தேடி வரும கடன்காரனிடம் கணவன் வீட்டில் இருக்க, பிள்ளை உடன் இருக்க, கணவன் வீட்டில் இல்லை என்று பொய் கூறுவார்கள். தகப்பன் வீட்டில் இருப்பது பிள்ளைக்குத் தெரியும். தாய் பொய் கூறுவதைப் பார்த்து பிள்ளையும் பொய் கூறப் பழகிக் கொள்கின்றது.

பிள்ளைகளை நல்லவனாக்குவதும் கெட்டவனாக்குவதும் பெருமளவில் பெற்றோரின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதை மறவாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு கட்டும் போது கவனிக்க வேண்டி வீட்டின் நீள அகலம்

| | | |
|---|---|---|
| 07அடி | - | எண்ணங்கள் நிறைவேறாது தடைப்படும் |
| 08 அடி | - | எண்ணிய காரியம் நிறைவேறும், செல்வம் பெருகும், பகை இருக்காது. |
| 09அடி | - | குடும்பத்தில் பிரச்சினை, சலிப்புகள் உண்டாகும். |
| 10அடி | - | பசு, தன தானிய விருத்தி |
| 11அடி | - | தீவினைகள் அணுகாது, வேளாண்மை விருத்தி |
| 13அடி | - | காரியத்தடங்கல், உறவினர் பகை |
| 14அடி | - | வாழ்வில் துன்பங்கள் துயரங்கள் நேரிடும் |
| 15அடி | - | வறுமை நோய்கள் ஏற்படும் |
| 16 அடி | - | மக்கட்பேறு, தனம் சேரும், மேன்மையான வாழ்வு |
| 17அடி | - | இறைவன் அருள் பாலிப்பார், அரச மதிப்பு, எதிரிகள் இருக்காது |
| 18அடி | - | பல வகையான துன்பங்கள் வந்து சேரும் |
| 19அடி | - | மனைவி மக்கட்கு பேறு துன்பங்கள் ஏற்படும் |
| 20அடி | - | பொருள்வரவு, மக்கட்பேறு மகிழ்ச்சி உண்டாகும். |
| 21அடி | - | துன்பம் அணுகாது, பால் பாக்கியம் பெருகும் |
| 22 அடி | - | பகைவர் அஞ்சுவர், மகிழ்ச்சியான வாழ்வு குழந்தைச் செல்வம் உண்டு |
| 23, 24,25 | - | நோய் விரோதம், ஆயுட் குறைவு ஏற்படும். |
| 26அடி | - | செல்வச்செழிப்பு சந்திரனைப் போல் வாழ்வு |
| 27அடி | - | வேளாண்மை விருத்தி, உலகம் போற்றும் வாழ்வு |
| 28 அடி | - | பகைவர்கள் அஞ்சுவார்கள், செழிப்போடு நிறைவான வாழவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 29 அடி | - | சகல செல்வமும் பெருகும் |
| 30 அடி | - | மக்கட்பேறு, செல்வச் செழிப்பு |
| 31 அடி | - | இறைவன் திருவருள் கிடைக்கும் |
| 32 அடி | - | இறைவன் திருவருள் கிடைக்கும் |
| 33 அடி | - | குடும்பம் சிறப்படையும் |
| 34அடி | - | துன்பம் பிணி உண்டாகும் |
| 35அடி | - | செல்வம் பல வழிகளிலும் சேரும் |
| 36 அடி | - | அரச பதவி கிடைக்கும் |
| 37அடி | - | இன்பசுகம், நல்வாழ்வு உண்டாகும் |
| 38 அடி | - | துன்பம், பிணி உண்டாகும் |
| 39அடி | - | இன்பசுகம், நல்வாழ்வு உண்டாகும் |
| 40 அடி | - | அலுப்பு, சலிப்பு சோர்வு உண்டாகும் |
| 41அடி | - | குபேரனைப் போல் வாழ்வார் |
| 42அடி | - | செல்வம் அனைத்தும் நிலையாக இருக்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வா...

உறவின் உயிர் துளி தந்த உயர் விழி
கண்மூடியதே
உருத்திரபுரத்தின் உயிர் கொடி இன்று
விண்ணில் ஏறியதோ
மலர் கொடியாளை விட்டு
உயிர் வேரும் அறுந்ததவோ
உயிர் கொடி பூத்த முல்லைகளை இனி யார் தான்
தாலாட்டுவதோ...!

புலம்பெயர் தேசத்தில்
நிலமது உறவையெல்லாம் தேடி காத்தாய்
உளமது சோர்கையில்
ஒவ்வொரு உறவையும் உயிரில் சேர்த்தாய்
அனலையின் திருவடியில் நாளும் பூப்பாய்
இன்று
அவனடி நோக்கி போனாயோ
இனி
எம்மடி எப்போ வருவாயோ

உன்கையால் கூழ்குடித்த உறவெல்லாம்
கூடி நிற்கையில்
கூழா மரமடியிலும் பலர்
உன் நினைவில் வாழ உதிர் கையில்
தாய்மடியின் உறவுக்கு நோய் பிடித்ததோ
சேய்கள் எல்லாம் அழுது கொள்ள
மரணமது கால் பிடித்ததோ

எங்கள் உறவே
எங்கள் உறவுகளின் வேரே
எங்கள் தெருவே
எங்கள் தேரே
சென்றுவா சிவலோகம்
மீண்டும் வா உருத்திரபுர யோகம்

-உருத்திரபுர உறவுகள்,
பிரான்ஸ்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவரவர் வாழ்க்கையை
## அவரவர் வாழுங்கள்

1. எறும்பு பட்டாம்பூச்சியின் வாழ்க்கையை வாழ ஆசைப்படவில்லை
2. நாய் சிங்கத்தைப் பார்த்து ஒரு நாளும் துளி கூட பொறாமைப் படவில்லை
3. யானை ஆகாயத்தில் பறக்கும் கிளியைக் கண்டு ஏக்கப் பெருமூச்சு விடவில்லை
4. காகம் குயிலின் இசையைக் கேட்டு தானும் அது போல் பாட ஏங்கவில்லை
5. சிற்பம் போல் சாதாரண கருங்கல் இல்லை
6. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளிலேயே ஒருவர் போல் மற்றொருவர் இல்லை
7. இன்று போல் நாளை இல்லை
8. நேற்றுப் போல் இன்று இல்லை
9. அதனதன் வாழ்க்கையை அது வாழ்கின்றது
10. நீ மட்டும் ஏன் பொறாமைப்படுகின்றாய்?
11. நீ ஏன் அடுத்தவனைப் பார்க்கின்றாய்?
12. நீ மட்டும் ஏன் புலம்புகின்றாய்?
13. நீ ஏன் வருந்துகிறாய்...?
14. நீ ஏன் ஏக்கப் பெருமூச்சு விடுகிறாய் ...?
15. உன் வாழ்க்கை விசேடமானது...
16. நீ அடுத்தவருடைய தூக்கத்தைத் தூக்கமுடியாது.
17. நீ அடுத்தவருடைய பசிக்குச் சாப்பிடமுடியாது
18. நீ அடுத்தவருடைய வாழ்க்கையை வாழ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Failure Means

Failure does not mean you have a complished nothing;
It means you have learnt something.
Failure does not mean that you have been defeated;
It means you must have a lot of faith.
Failure does not mean you have been lazy;
It means you have to do somrthing in a different way.
Failure does not mean you are inferior,
It means you have not perfect.
Failure does not mean you have wasted your life;
It means you have reasons to start a fresh.
Failure does not mean you should give up;
It means you must try harder till you suceed.
Failure does not mean you will never make it;
It means it will take a little longer time.
Failure does not mean that God has abandoned you;
It means that God has a better way fou you.

## Homophones

| | | | | |
|---|---|---|---|---|
| Buy | - | by | - | bye |
| Caw | - | Core | - | Corps |
| Cite | - | Sight | - | Site |
| Doe | - | doh | - | dough |
| ewe | - | Yew | - | You |
| meet | - | meat | - | mete |
| Right | - | rite | - | Write |
| Rain | - | reign | - | rein |
| Heal | - | Heel | - | He'll |
| Flew | - | Flu | - | Flue |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Let them Learn

I want to teach my students more
than lessons in a book;
I want to teach them deeper things
that people overlook
The value of a rose in bloom, its
use and beauty, too
A Sense of curiosity to discover
what is true;
How to think and how to choose
the right above the wrong,
How to live and lean each day
and
grow up to be strong;
to teach them always how to gain
in wisdom and in grace
so they will someday make the
world a brighter, better place.
Lord, let me be a friend and guide
to give these minds a start
Upon their way down life's long
road, then I ll have done my part.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Synonyms

amazing - Astounding
brave - Courageous
dangerous- Unsafe
definite - Certain
eager - Keen
end - terminate
fair - just
scared - afraid
strange - odd
Funny - humorous
wrong - incorrect
true - accurate
Use - Utilize

## Antonyms

abundant - Scarce
apart - together
backward - Forward
boundless - limited
common - rare
dim - bright
dusk - dawn
even - odd
increase - decrease
feeble - strong
immense - tiny
junior - senior
Knowledge - ignorance



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Class room language

Open the door
I don't Know
Speak up
work in pairs
Take your books
Be quiet
Read
listen
Look at the black board
Open your book
Close your book
Can I switch on/off the light?
may i go to the toilets?
Don't Cheat
Sorry I am late
Have a nice day



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## We learn some proverbs

A Friend in need is a friend indeed
A Penny saved is a penny earned
A bird in hand is worth two in the bush
A liveing dog is better than a dead lion
A burnt child dreads the fire.
A drowning man clutches at a straw
A man is old as he feels
A stitch in time saves nine
A watched pot never boils
An open door may tempt a saint

## Animals and Their young

| | | |
|---|---|---|
| Antelope | - | Calf |
| Bear | - | Cub |
| Beaver | - | Kit |
| Cat | - | Kitten |
| Fish | - | Fry |
| Elephant | - | Calf elephant |
| Fowl | - | Chick, Chicken |
| Kangaroo | - | Joey |
| Pig | - | Piglet |
| Shark | - | Pup |
| Whale | - | Calf |
| Goose | - | Gosling |
| Owl | - | Owlet |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஒரு பொருட் பல சொற்கள்

கடல் - ஆழி, வேலை, சாகரம்
சிங்கம் - அரி, மிருகேந்திரன், கேசரி
பாம்பு - அரவம், பணி, கட்செவி
போர் - அமர், யுத்தம், செரு
மலை- பருவதம், கிரி, குன்று
மாலை - ஆரம், கண்ணி, தொடை
மேகம் - கொண்டல், கார், முகில்
வாசனை - , நாற்றம், விரை
வில் - சிலை, சுருதி, சாபம்
வேதம் - மறை, சுருதி, ஆரணம்

## பல பொருள் ஒரு சொல்

அரி - சிங்கம், வண்டு, திருமால்
ஆலம் - விடம், ஒரு மரம், மழைநீர், அம்புக்சுடு
கண்டம் - கழுத்து, ஆபத்து .நிலப்பெரும் பிரிவு
கலம் - பாத்திரம், கப்பல், ஆபரணம்
சரம் - அம்பு, அசையும் பொருள், பூமாலை
தாலம் - பனை, நா, பூமி
பதி - அரசன், இடம், கணவன்
பார் - பூமி, கற்பாறை, பார்(த்தல்)
வளை - சங்கு, புற்று, வளைதல்
அணி - அலங்காரம், ஆபரணம், ஒழுங்கு,
படைப்பிரிவு, அணிதல்
அம்பு - கணை, மூங்கில், நீர் மேகம்
அரங்கம் - நாடகசாலை, சபை, போர்க்களம்
ஈரம் - குளிர்ச்சி, அன்பு, கிருபை, பண்பு, அறிவு,
உரு - உடல்,வடிவம், கோபம், நிறம்
சேய்- பிள்ளை, முருகன், சிவப்பு, இளமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாட்கள்

**ஜனவரி**

ஜனவரி 1 - உலக பூகோள குடும்ப நாள்
ஜனவரி 1 - உலக சமாதான நாள்
ஜனவரி 4 - உலக பிரெய்லி நாள்
ஜனவரி 5 - உலக பறவைகள் நாள்
ஜனவரி 6 - உலக யுத்த அநாதைகள் நாள்
ஜனவரி 10 - உலக சிரிப்பு நாள்
ஜனவரி 18 - உலக படைவீரர் நாள்
ஜனவரி 12 - இளைஞர் நாள்
ஜனவரி 26 - சுங்கத்துறை நாள்

**பெப்ரவரி**

பெப்ரவரி 2 - உலக திருமண நாள்
உலக ஈரநில நாள்
உலக புற்றுநோய் நாள்
பெப்ரவரி 11 - உலக நோயாளர் நாள்
உலக வானொலி நாள்
பெப்ரவரி 14 - உலக காதலர் நாள்
உலக பெற்றோர் நாள்
பெப்ரவரி 20- உலக சமூக நீதி நாள்
பெப்ரவரி 21 - உலக தாய்மொழி நாள்
பெப்ரவரி 22 - உலக சாரணர் நாள்
பெப்ரவரி 25 - உலக காசநோய் தடுப்பு நாள்
பெப்ரவரி 28 - தேசிய விஞ்ஞான நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்ச்

மார்ச் 3 - உலக தொழிலாளர் பாதுகாப்பு நாள்
மார்ச் 6 - உலக தொழுநோய் ஒழிப்பு நாள்
மார்ச் 8 - உலக மகளிர் நாள்
மார்ச்11 - உலக பொதுநலவாய நாள்
மார்ச் 15 - உலக நுகர்வோர் நாள்
உலக ஊனமுற்றோர் நாள்
மார்ச் 21 - உலக வன நாள்
மார்ச் 22 - சர்வதேச குடியுரிமை நாள்
மார்ச்23 - உலக வளிமண்டல நாள்
மார்ச் 24 - உலக காசநோய் நாள்
மார்ச் 25 - உலக செஞ்சிலுவை நாள்
மார்ச் 27 - சர்வதேச நாடக நாள்

## ஏப்ரல்

ஏப்ரல்1 - உலக முட்டாள் நாள்
ஏப்ரல் 7 - உலக சுகாதார நாள்
ஏப்ரல் 12 - உலக விண்வெளி நாள்
ஏப்ரல் 17 - உலக பாரம்பரிய நாள்
ஏப்ரல் 18 - பண்பாட்டு நாள்
ஏப்ரல் 22 - உலக பூமி நாள்
ஏப்ரல் 23 - சர்வதேச புத்தக நாள்

## மே

மே1 - சர்வதேச தொழிலாளர் நாள்
மே 3 - உலக ஆஸ்துமா நாள், சர்வதேச பத்திரிகை நாள்
மே 2 - உலக தாயார் நாள்
மே 8 - சர்வதேச சிலுவை நாள்
செம்பிறை நாள்
சர்வதேச நூதனசாலை நாள்
மே 11 தேசிய தொழில்நுட்ப நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 14 - சர்வதேச அன்னையர் நாள்
மே 15 - சர்வதேச குடும்ப நல நாள்
மே 17 - உலக தகவல் நாள்
மே 18 - உலக நூதனசாலை நாள்
மே 21 - உலக சர்வதேச கலாச்சார பண்பாட்டு நாள்
மே 31 - சர்வதேச புகைத்தல் மறுப்பு நாள்

## யூன்

யூன் 2 - சர்வதேச இளைஞர் நாள்
யூன் 4 - சர்வதேச அப்பாவிப் பிள்ளைகள் நாள்
யூன் 5 - சர்வதேச சுற்றுச்சூழல் நாள்
யூன் 7 - உலக தொல்பொருளியலாளர் நாள்
யூன் 14 - உலக இரத்த வழங்குநர் நாள்
யூன் 20 - உலக அகதிகள் நாள்
யூன் 26 - உலக போதைப் பொருள் நாள்
யூன் 27 - உலக நீரிழிவாளர் நாள்

## யூலை

யூலை 1 - உலக கூட்டுறவு நாள்
உலக மருத்துவர் நாள்
யூலை 7 - உலக கூட்டுறவாளர் நாள்
யூலை 8 - உலக எழுத்தாளர் நாள்
யூலை 11 - உலக சனத்தொகை நாள்
யூலை17 - உலக வறுமை ஒழிப்புத் நாள்
யூலை 20 - உலக சதுரங்க நாள்
யூலை 23 - உலக மனவழுத்த நாள்
யூலை 26 - சர்வதேச சித்திரவதை எதிர்ப்பு நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட்

ஆகஸ்ட் 1 - உலக தாய்ப்பால் நாள்

ஆகஸ்ட் 3 - தேசிய நட்பு நாள்

ஆகஸ்ட் 9 - சர்வதேச ஆதிவாசிகள் நாள்

ஆகஸ்ட் 18 - உலக படப்பிடிப்பாளர் நாள்

ஆகஸ்ட் 29 - சர்வதேச விளையாட்டு நாள்

**செப்ரெம்பர்**

செப்ரெம்பர் 2 - தென்னை நாள்
வன்முறையற்ற நாள்

செப்ரெம்பர் 8 - சர்வதேச எழுத்தறிவு நாள்

செப்ரெம்பர் 10 - தற்கொலை தடுப்பு நாள்

செப்ரெம்பர் 16 - உலக ஓசோன் நாள்

செப்ரெம்பர் 21 - உலக சமாதான நாள்

செப்ரெம்பர்21 - உலக செவிப்புலன் அற்றோர் நாள்

செப்ரெம்பர் 27 - உலக சுற்றுலா நாள்

செப்ரெம்பர் 30 - குப்பைக்கு எதிரான செயற்பாட்டு நாள்

**ஒக்டோபர்**

ஒக்டோபர் 1 - உலக முதியோர் நாள்

ஒக்டோபர் 2 - உலக காந்தி ஜெயந்தி நாள்

ஒக்டோபர் 3 - சர்வதேச மது ஒழிப்பு நாள்

ஒக்டோபர் 4 - உலக மிருக நலன்புரி நாள்

ஒக்டோபர 5 -சர்வதேச சிறுமிகள் நாள்

ஒக்டோபர் 6 - சர்வதேச ஆசிரியர் நாள்

ஒக்டோபர் 9 சர்வதேச அஞ்சல் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்டோபர் 10 - உலக உளச் சுகாதார நாள்
ஒக்டோபர் 15 - வெள்ளைப் பிரம்பு நாள்
ஒக்டோபர் 16- உலக உணவு நாள்
தர நிர்ணய நாள்
ஒக்டோபர் 24- ஐக்கிய நாடுகள் நாள்
உலக அபிவிருத்தி நாள்
ஒக்டோபர் 31 - உலக சிக்கன நாள்

**நவம்பர்**

நவம்பர் 3 - உலக சகிப்புத் தன்மை நாள்
நவம்பர் 17 - உலக காக்கை வலிப்பு நாள்
நவம்பர் 21 - சர்வதேச கடற்றொழிலாளர் நாள்

**டிசெம்பர்**

டிசெம்பர் 1 - சர்வதேச எயிட்ஸ் நாள்
டிசெம்பர் 2 - உலக ஊனமுற்றோர் நாள்
டிசெம்பர் 10 - சர்வதேச மனித உரிமைகள் நாள்
டிசெம்பர் 13 - சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு நாள்
டிசெம்பர் 14 - உலக குழந்தைகள் நாள்
டிசெம்பர் 18 - சிறுபான்மை உரிமை நாள்
டிசெம்பர் 23 - சர்வதேச உளவு நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரும்படை எனும் சரும நோய்:**

கோவை இலை ஒரு கைப்பிடியளவு ,5 கிராம் கருஞ்சீரகம் சேர்த்து மைய அரைத்து படை மீது தடவி ஒரு மணி நேரம் ஊறிய பின் குளிக்குவும். தினசரி இதே போல் செய்து வர கரும்படை மறையும்.

## முகச் சருமம் பொலிவு :

கசகசா தேவையான அளவெடுத்து எருமைத்தயிர் சேர்த்து சந்தனம் போல மையாக அரைத்து இரவு படுக்கப்போகும் முன் முகத்தில் தடவி காலையில் சோப்புப் போட்டு வெந்நீரில் முகம் கழுவி வர முகச்சுருக்கம் ,வறண்ட சருமம் போன்றவை படிப்படியாக குணமடைந்து முகம் பொலிவடையும்.

**முகப்பரு :**

வெள்ளைப்பூண்டு 15 கிராம் துத்தி இலை 15 கிராம் இரண்டையும் ஒன்றாக நசுககி 50 மில்லி செக்கு நல்லெண்ணெயில் போட்டு சிறு தீயில் காச்சி நீர் வற்றியதும் இறக்கி வடிகட்டி சேமித்து தினசரி இரவு பருக்களின் மீது தடவி வர குணமடையும்.வடுக்கள் மறையும்.

அல்லது கிராம்பை மொட்டு நீக்கி சிறிதளவு வெந்நீரில் உரசினால் வரும் பசையை முகப்பருக்களில் இரவில் தடவி காலை கடலைமாவு தேய்த்து வெந்நீரில் முகம் கழுவி வரலாம்.

**தேமல் நீங்க :**

பேரிச்சம்பழவிதையை நெருப்பில் சுட்டு தண்ணீரில் இழைத்து பசை போலாக்கி தேமல் மீது இரவு நேரங்களில் தடவி வர தேமல் படிப்படியாக மறையும்.

**ஸ்டிக்கர் பொட்டு அலர்ஜி :**

சிலருக்கு ஸ்டிகர்பொட்டு வைத்தால் நெற்றியில் புண்ணாகி சருமம் கறுப்பாக மாறிவிடும் .வில்வ மரக்கிளையை ஒடித்து அதில் ஒரு குச்சியை சந்தனக் கல்லில் நீர் சேர்த்து இழைத்து வரும் குழம்பை நெற்றியில் கறுப்பான பகுதியில் மட்டும் தடவி வர படிப்படியாக சீரடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியர்க்குரு:**

வெங்காயத்தை இடித்து சாறெடுத்து வியர்குரு மீது தடவி 30 நிமிடங்களுக்குப் பிறகு குளித்து வர வியர்க்குரு மறைவதுடன் உடல் குளிர்ச்சியடையும்

## அம்மைத்தழும்பு மறைய:

கறிவேப்பிலை ஒருகைப்பிடி, கசகசா ஒரு தேக்கரண்டி, கஸ்தூரி மஞ்சள் ஒரு துண்டு மூன்றையும் தண்ணீர் சேர்த்து சந்தனம் போலரைத்து வடுக்கள் மீது தடவி 30 நிமிடங்களுக்குப் பின் குளித்து வர படிப்படியாக வடுக்கள் குணமடையும்.

**கரும்படை சரும நோய் :**

கோவை இலைச்சாறு தேவையான அளவெடுத்து 5 கிராம் கருஞ்சீரகப்பொடி சேர்த்தரைத்து கரும்படையில் தடவி ஒரு மணி நேரத்திற்குப் பின்குளித்து வர படிப்படியாக குணடையும்.

பொலிவிழந்த முகச்சருமம்:

ஒரு முட்டையின் வெண்கரு அரைத் தேக்கரண்டி ஒலிவ் எண்ணெய் சில துளி சேர்த்துக்கலக்கி முகத்தில் தடவி 30 நிமிடங்களுக்குப் பின் வெதுவெதுப்பான வெந்நீரில் கழுவி வர முகச்சருமம் பொலிவடையும்.

- நல்வழிகள்...-

**சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்** அது இதயத்தின் ஓசை

**சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்** அது இளமையின் ரகசியம்

**படிப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்** அது அறிவின் வழி

**நட்புக்கு நேரம் ஒதுக்குவோம்** அது மகிழ்ச்சியின் வழி

**தியானத்திற்கு நேரம் ஒதுக்குவோம்** அது தெளிவுக்கு வழி

**உழைப்புக்கு நேரம் ஒதுக்குவோம்** அது வெற்றிக்கு வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்



ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாள்சுமந்தே
அந்திபகலாய்க் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிச் சீராட்டிய தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
சந்து வளர்த்தெடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றிய தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் உருசியுள்ள
தேனே திரவியமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தே என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்......



எங்கள் வாழ்க்கைப் பயணத்திற்கு
ஒளி விளக்காய் இருந்து வளமான வாழ்வுக்கு
வழிகாட்டிய எங்கள் குலவிளக்கு
நம்மை விட்டுப் பிரிந்த துயர் சமயத்தில்த
நேரில் வந்தும் தொலைபேசி மற்றும் பிறவழிகள் மூலமும்
ஆறுதல் தெரிவித்தும், அனுதாபச் செய்தி
வழங்கியும் எமது வேதனையில்
பங்கு கொண்டவர்களுக்கும்
இறுதிக்கிரியைகள் மற்றும்
இன்றைய நிகழ்வில் பங்கு கொண்டோருக்கும்
எமது மனப்பூர்வமான நன்றிகள்

**"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**




இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி



01. அறஞ்செய விரும்பு
02. ஆறுவது சினம்
03. இயல்வது கரவேல்
04. ஈவது விலக்கேல்
05. உடையது விளம்பேல்
06. ஊக்கமது கைவிடேல்
07. எண் எழுத்து இகழேல்
08. ஏற்பது இகழ்ச்சி
09. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டு ஒன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட உரை
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித்து உண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரம் ஆடேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செயேல்
29. இளமையில் கல்
30. அரனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப் படவாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட்டு ஒழி
43. சக்கர நெறி நில்
44. சான்றோர் இனத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. களிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச் செய்
50. சேரிடம் அறிந்து சேர்
51. சை எனத் திரியேல்
52. சொல் சோர்வு படேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோன் எனத்திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக்கு அடிமை செய்
57. தீவினை அகற்று
58. துன்பத்திற்கு இடம் கொடேல்
59. தூக்கி வினை செய்
60. தெய்வம் இகழேல்
61. தேசத்தோடு ஒத்து வாழ்
62. தையல் சொல் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடு ஒப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர்விளை யாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல் பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட ஒழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய உரையேல்
75. நோய்க்கு இடம் கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடு பெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
81. பூமி திருத்தி உண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதமை அகற்று
84. பையலோடு இணங்கேல்
85. பொருள்தனைப் போற்றி வாழ்
86. போர்த் தொழில் புரியேல்
87. மனம் தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடம் கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோடு இணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள் சேர்
94. மேன்மக்கள் சொல் கேள்
95. மை விழியார் மனை அகல்
96. மொழிவது அறமொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாய் இரு
103. ஊருடன் கூடி வாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினை செய்யேல்
106. வைகறைத் துயில் எழு
107. ஒன்னாரைத் தேறல்
108. ஓரம் சொல்லேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா பதிப்பகம், 05, கனகபுரம்.